
பக்கங்கள் 23

# காலை முரசு

| முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 27 திங்கட்கிழமை 13.10.2025 | அதிர்வு 73 |
|---|---|---|---|

## கிளிநொச்சி குண்டு வெடிப்பு: காயமடைந்த ஒருவர் மரணம்!



கிளிநொச்சி, தட்டுவான் கொட்டிப் பகுதியில் உள்ள பாழடைந்த வீடொன்றில் வெடி குண்டைப் பிளந்து மருந்தை எடுக்க முயன்ற போது குண்டு 02



# அநுர - மோடி முயற்சியால் மென்மேலும் வலுவடைந்த இலங்கை - இந்திய உறவு

## தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு

"இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் மேற்கொண்ட இருதரப்பு முயற்சிகளால் இலங்கை - இந்திய உறவு மென்மேலும் வலுப்பெற்றுள்ளது."

- இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்தார். 03

## பிரம்படிப் படுகொலையின் 38 ஆவது நினைவேந்தல்





(எஸ்.நிதர்ஷன்)

இந்திய அமைதிப் படையினரால் யாழ். கொக்குவில் – பிரம்படியில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

பிரம்படி வீதி ஆரம்பிக்கும் இடத்தில் ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் இந்த நினைவேந்தல் நேற்று காலை 9 மணிக்கு நடைபெற்றது.

நினைவுத் தூபிக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, 04




மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கும் தேசிய மக்கள் சக்தி அரசு, எல்லை நிர்ணய விடயத்தை ஒரு விவகாரமாகக் காட்டி, அதை தன் இழுத்தடிப்புக்கு ஒரு காரணமாக முன்வைக்கின்றது.

அந்த விடயத்துக்குள் பொதிந்திருக்கும் ஓர் அம்சம் பொதுமக்கள் பலருக்கும் தெரியாமல் இருப்பதால் அது பற்றி இன்று சற்று விவரிக்கலாம் என்று நினைக்கிறேன்.

மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை மாற்றப் போகின்றோம் என்ற பெயரில்தான் மைத்திரி – ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசு 2017 இல் அப்போது இருந்த மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை ரத்துச் செய்கின்ற ஏற்பாட்டைச் செய்தது. 02

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# சம்பள சூத்திரம் என்ன?

## ஜனாதிபதியிடம் மனோ எம்.பி. கேள்வி



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று விடுத்துள்ள அறிவிப்பை வரவேற்றுள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., ஆனால் சம்பள சூத்திரம் என்ன என்றும் வினவியுள்ளார்.

இது குறித்து அவரின் எக்ஸ் தள பதிவில் உள்ளதாவது:-

“இன்று, அடிப்படை நாள் சம்பளம் ரூ. 1,350 ஆகும். கேள்வி இதுதான்: அரசு அடிப்படை நாள் சம்பளத்தை உயர்த்தவுள்ளதா அல்லது பிற மேலதிக கொடுப்பனவுகள் மூலம் ரூ. 1,750 வருகின்றதா?

ஜனாதிபதி முதலில் மூன்று அரச பெருந்தோட்ட நிறுவனத் தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்தி விட்டு, பின்னர் தனியார் கம்பனிகளுடன் பேச வேண்டும்.

அடிப்படைச் சம்பளம் மட்டுமே EPF பங்களிப்புக்கு உட்பட்டது. கொடுப்பனவுகள் அல்ல.

கம்பனிகளின் நிலையான நிலைப்பாடு எப்போதும் உறுதியானது. தொழிலாளர் அதிக கொழுந்து பறித்தால் கூடுதல் சம்பளம் வழங்கத் தயார். இது தான் அவர்களின் சூத்திரம்.

“அதிக கொழுந்து, அதிக சம்பளம்”. ஜனாதிபதியின் சூத்திரமும் இதுவென்றால், இதில் புதியதொன்றும் இல்லை.

தொழிலாளர்கள் அதிக கொழுந்து பறிக்க முடியாமைக்குக் காரணம் என்ன? ஏனெனில் தோட்டங்கள் பல தசாப்தங்களாகப் பராமரிக்கப்படவில்லை. ஆகவே, கொழுந்து குறைந்துள்ளது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நிலைப்பாடு, ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியுடனான எமது உடன்படிக்கையின்படி, தொழிலாளர்கள் பங்குதாரர்களாக மாற வேண்டும். சிறு தோட்ட கூட்டுறவுகள் மூலம் இது சாத்தியமாகும்.

இதில் அரசு, தொழிலாளர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியோருக்கிடையில் கூட்டு ஒப்பந்தம் உருவாக வேண்டும். இதுதான் நிரந்தரத் தீர்வு.” - என்றுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரகசியம் பரகசியம்...

அப்போதைய ஒழுங்கின்படி, புதிய சட்டத்தை உருவாக்கி தேர்தலை நடத்த திட்டமிடப்பட்டது.

அந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாகாண சபையும் தொகுதி வாரியாக புதிதாக எல்லை நிர்ணயம் செய்யப்படும். அதன் பின்னர் ஒவ்வொரு மாகாண சபைக்கான உறுப்பினர்களும் தொகுதி அடிப்படையில் 60 வீதமும் விகிதாசார பிரதிநிதித்துவத்தில் மிகுதி 40 வீதமும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அதுதான் அப்போது காணப்பட்ட இணக்கம்.

ஆனால், அதன் பின்னர் 2018 இல் இத்தகைய வட்டார ரீதியான மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவ ரீதியான கலப்பு தெரிவு முறைமையில் உள்ளூராட்சி தேர்தல் நடந்த போதுதான் இந்த கலப்பு முறையின் நடைமுறைப் பிரச்சினைகள், சிக்கல்கள், குழப்பங்கள் குறித்து அரசியல் கட்சிகள் உணர்ந்து கொண்டன.

அறுபது வீதமான எண்ணிக்கை உறுப்பினர்களை மாகாணங்களின் தொகுதிகள் ரீதியில் தெரிவு செய்தால், அது மாகாண ரீதியில் பெரிய கட்சிகளுக்கு சாதகமாகவும், சிறிய மற்றும் சிறுபான்மையினரின் கட்சிகளுக்கு பாதிப்பாகவும் அமையும் என்பதை அரசியல் கட்சிகள் உணர்ந்து கொண்டமையால் இந்த எல்லை நிர்ணயம் முறைமைக்கு இத்தகைய கட்சிகள் எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கின.

அப்போதைய நிலையில் நாடாளுமன்றத்தில் கூட இரண்டு உறுப்பினர்களை மட்டும் தேர்ந்தெடுக்கும் அளவுக்கு சிறிய கட்சியாக தேசிய மக்கள் சக்தி இருந்ததால், அந்த எல்லை நிர்ணய திட்டத்தை தேசிய மக்கள் சக்தியும் கடுமையாக எதிர்த்தது. முஸ்லிம்களின் கட்சிகள், மலையக மக்களின் கட்சிகள் போன்றவையும் சிறிய கட்சிகளின் அணிக்குள் வருகின்றமையால் இந்தத் தேர்தல் முறைமை அவற்றுக்கும் பாதிப்பைத் தரும் என்ற காரணத்தினால் அவையும் அந்தத் திட்டத்தை எதிர்த்தன.

ஆனால் மாகாண சபையைப் பொறுத்தவரை வடக்குக் கிழக்கில் மாத்திரம் கரிசனை கொண்டுள்ள இலங்கை தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அது பெரிய கட்சிகளின் வரிசைக்குள் வருவதால் இந்த முறைமை அதற்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது என்பதை தமிழரசு கட்சி புரிந்து கொண்டது. ஆயினும் பிற தமிழ்க் கட்சிகள், மலையகத் தமிழ்க் கட்சிகள் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் பாதிப்பை உணர்ந்து அவற்றுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்ற காரணத்திற்காக, இந்த எல்லை நிர்ணயத் திட்டத்தை தமிழரசுக் கட்சியும் சேர்ந்து எதிர்த்தது.

அப்போது சிறிய கட்சிகளின் வரிசையில் இருந்த தேசிய மக்கள் சக்தியும் படு தீவிரமாக - மூர்க்கமாக - அதை எதிர்த்தது.

ஆனால் இப்போது ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலை அடுத்து நாடு முழுவதிலும் பிரதிநிதித்துவத்தைக் கொண்ட பெரிய கட்சியாக அது மாறிவிட்டதால், பழைய நிலைமையை அடியோடு கைவிட்டு, இந்த எல்லை நிர்ணயத் திட்டத்தின் ஊடாகக் கலப்புத் தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்தி, அதன் கீழ் தேர்தலை நடத்தச் செய்து, தனக்கு அதிக எண்ணிக்கை மாகாண சபை உறுப்பினர்களை பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் அந்த முறைமையை அது முன் தள்ள இப்போது துடியாய்த் துடிக்கின்றது.

ஏற்கனவே, வடக்குக் கிழக்கில் தனக்குச் சாதகமான நிலை இருந்தும் கூட, ஏனைய சிறிய மற்றும் சிறுபான்மையினத்தவர்களின் கட்சிகளின் நலனை கருத்தில் கொண்டு அவர்களோடு சேர்ந்து திட்டத்தை எதிர்க்கும் கொள்கை முடிவை உறுதியாகத் தமிழரசுக் கட்சி பின்பற்றி நிற்கின்றது.

அது ஒரு புறம், என்றால் மறுபக்கத்தில் சிறிய கட்சியாக இருந்த போது இந்தத் திட்டத்தை ஏனைய சிறிய மற்றும் சிறுபான்மை இனத்தவர்களின் கட்சிகளோடு சேர்ந்து எதிர்த்து விட்டு, தான் இப்போது பெரிய கட்சிகளில் ஒன்றாக நிலை மாறியதும் குத்துக்கரணம் அடிக்கின்றது ஜே.வி.பி. உட்பட்ட தேசிய மக்கள் சக்தி. அது, அதன் வழமையான சந்தர்ப்பவாதப் போக்கு என்ற பரவணிப் பண்பியல்பு தான்...!

இதுதான் தேசிய மக்கள் சக்திக்கும் தமிழரசுக் கட்சிக்கு உள்ள பிரதான வேறுபாடு. திசைகாட்டியை ஆதரித்த தமிழர்கள் இதைப் புரிந்து கொண்டால் நல்லது.

### கிளிநொச்சி...

வெடித்துச் சிதறியதில் படுகாயமடைந்த இருவரில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி தட்டுவான்கொட்டிப் பகுதியில் உள்ள பாழடைந்த வீடொன்றில் இருவர், வெடிகுண்டைப் பிளந்து மருந்தை எடுக்க முயன்ற போது குண்டு திடீரென வெடித்துச் சிதறியது.

இந்தச் சம்பவத்தில் இருவரும் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், கொடிகாமத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் கேதீஸ்வரன் (வயது 50) என்பவரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# காகிதத் தாள்களே கையளிப்பு! விளம்பரத்துக்காகவே நிகழ்வு!!

## மக்களைத் திசை திருப்பும் தந்திரோபாயம் என்றும் ஜீவன் ஆவேசம்



அநுர அரசால் நேற்று வழங்கப்பட்ட வீட்டு ஆவணப் பத்திரங்கள் வெறும் காகிதத் தாள்களை வழங்கும் ஒரு விளம்பர நிகழ்ச்சி மாத்திரமே என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவருடைய சமூக ஊடகப் பதிவின் மூலம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

“அரசால் வழங்கப்படும் இந்த ஆவணமானது வழக்கமாக பயனாளர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்படும், மேலும் வீடுகள் ஒப்படைக்கப்படும் போது ஒரு நிகழ்வு நடத்தப்படும். (அவை முடிந்ததும்) இந்த நிகழ்வானது 2000 வீடுகளைக் கையளிப்பது அல்ல. ஆனால் 2000 காகிதத் தாள்களைக் கையளிப்பதை உள்ளடக்கிய ஒரு விளம்பர நிகழ்வு மாத்திரமே.

இந்தக் காகித ஆவணம் வழங்கும் நிகழ்வுக்கு எந்த தேவைப்பாடுகளும் இல்லை. கடந்த ஒரு வருடமாக மலையகத்தில் அல்லது மலையகச் சமூகத்துக்காக எந்தவொரு வேலையும் செய்யப்படவில்லை என்ற உண்மையிலிருந்து பொதுமக்களைத் திசைதிருப்புவதற்கான இது ஒரு தந்திரோபாயம் மட்டுமே.

குறிப்பாக வேதன அதிகரிப்பு இல்லை, வீடுகள் கட்டப்படவில்லை, அபிவிருத்திகள் ஏதும் இடம்பெறவில்லை.” - என்றுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**அநுர-மோடி...**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் பதுளை, பண்டாரவளையில் நேற்று நடைபெற்ற இந்திய வீடமைப்புத் திட்டத்தின் நான்காம் கட்டத்தின் இரண்டாம் தொகுதி அங்குரார்ப்பண நிகழ்வில் இந்தியத் தூதுவர் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“இந்த நிகழ்ச்சி எனக்கு மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அளிக்கின்றது. இந்தியாவின் உதவியுடன் செயற்படும் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் நான்காம் கட்டத்தின் இரண்டாம் கட்டம் இன்று ஆரம்பிக்கப்படுகின்றது.

இது இலங்கை - இந்திய உறவின் ஆழத்தையும் நட்பையும் இது பிரதிபலிக்கின்றது.

இரு நாடுகளும் இணைந்து மக்களின் வாழ்க்கை நலனையும் முன்னேற்றத்தையும் குறிக்கோளாகக் கொண்டு செயற்படுகின்றன.

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் மேற்கொண்ட இருதரப்பு முயற்சிகளால் இந்த உறவு மென்மேலும் வலுப்பெற்றுள்ளது.

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்கள், இரு நாடுகளுக்கிடையிலான உறவின் பாலமாக இருந்து வருகின்றனர். அவர்கள் இலங்கையின் பொருளாதாரம், கல்வி, சமூக மேம்பாட்டில் முக்கிய பங்காற்றுகின்றனர்.

இன்றைய திட்டம் - மொத்தம் 14 ஆயிரம் வீடுகள் - அந்தச் சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை மூன்றாவது கட்டத்தில் 4 ஆயிரம் வீடுகள் நிறைவு பெற்றுள்ளன.

2017 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தபடி, நான்காம் கட்டத்தின் கீழ் மேலும் 10 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன. இன்று அதில் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது.

இந்திய அரசின் ஆதரவில் இலங்கையின் 25 மாவட்டங்களிலும் மொத்தம் 65 ஆயிரம் வீடுகள், 64 பில்லியன் இலங்கை ரூபா மதிப்பில் கட்டப்படும். இது பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்குப் பாதுகாப்பான இருப்பிடத்தையும் மேம்பட்ட வாழ்க்கையையும் அளிக்கும்.

வீடுகள் கட்டுவது மட்டுமல்ல எதிர்காலத்தைக் கட்டுவதே இந்தியாவின் நோக்கம். கல்வி, சுகாதாரம், திறன் மேம்பாடு, சமூக உட்புகுத்தல் போன்ற துறைகளிலும் இந்தியா - இலங்கையுடன் இணைந்து பணிபுரிகின்றது.

இதுவரை பல பள்ளிகளுக்கு சயின்ஸ் லேப், ஸ்மார்ட் வகுப்பறைகள், ஆசிரியர் பயிற்சிகள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டு இந்திய வம்சாவளித் தமிழர்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவடைந்ததை நினைவுகூர்ந்து, இந்தியா 2.5 பில்லியன் ரூபா மதிப்பில் நிதி ஒதுக்கீடு செய்தது.

இதன் கீழ் பல சமூக மேம்பாட்டு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக ஆசிரியர் பயிற்சி திட்டம் மூலம் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

அதேபோல், சுகாதார வசதிகள், கல்வி நிறுவன மேம்பாடு, சமூக இணைப்பு ஆகிய துறைகளில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது அண்மைய விஜயத்தின் போது சீகதா அம்மன் ஆலய அபிவிருத்தி மற்றும் சுற்றுலா வளர்ச்சிக்கான உதவிகளையும் அறிவித்திருந்தார். இதனால் வடக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் பொருளாதாரம் மற்றும் சமூக முன்னேற்றம் வேகமாக நடைபெறும்.

இந்தியாவின் உதவி என்பது ஒரு நண்பனின் உதவியல்ல - ஒரு குடும்ப உறுப்பினரின் பொறுப்புணர்வு கொண்ட உதவியாகும்.

இன்றைய நிகழ்வில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இந்திய பூர்வீகத் தமிழர் சமூகத்துக்கான ஆதரவு எப்போதும் தொடரும்.

திருவள்ளுவர் கூறியது போல்,

“விருப்பறாச் சுற்றம் இகயின் அருப்பறா ஆகும் பலவும் தரும்.”

அதாவது, உண்மையான பாசமும் நம்பிக்கையும் கொண்ட உறவு பல நன்மைகளை அளிக்கும்.

அந்த உறவின் அடிப்படையில்தான் இலங்கை - இந்திய நட்புறவு வேரூன்றி வளர்ந்து வருகின்றது.

இறுதியாக, நெருங்கி வரும் தீபாவளி பண்டிகை வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த வீடமைப்புத் திட்டத்தின் மூலம் பல குடும்பங்கள் தங்கள் புதிய இல்லங்களில் ஒளியையும் நம்பிக்கையையும் காணட்டும்.” - என்றார்.

# பிரம்படிப் படுகொலையின் 38 ஆவது நினைவேந்தல்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலர் மாலை அணிவித்து மலர் தூவி இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்ட பொதுமக்கள் நினைவு கூரப்பட்டனர்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், முன்னால யாழ். மாநகர மேயர் வி. மணிவண்ணன், நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர்கள், படுகொலையானவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில், படுகொலையான மக்களின் நினைவாக பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்திய அமைதிப் படையினர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக 'பவான்' நடவடிக்கையை முன்னெடுத்தனர். இதன்போது, 1987 ஒக்ரோபர் 11, 12ஆம் திகதிகளில் பிரம்படிக்குள் நுழைந்த இந்தியப் படையினர் அப்பாவிப் பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு அவர்களை வீதியில் படுக்கவைத்து கவச வாகனங்களால் ஏற்றி நசித்துக் கொன்றனர். இவ்வாறு சுமார் 50 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்திய இராணுவத்தினர் ஈழத்தில் நிகழ்த்திய முதலாவது படுகொலை இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

















## கடற்படைக்கு றேடர் அமைப்பதற்காக
# வலிகாமம் வடக்கில் விடுவித்த காணியை அபகரிக்கும் அரசு!

யாழ். வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் – நகுலேஸ்வரம் கிராம அலுவலர் பகுதியில், கடற்படைக்கு றேடர் அமைக்கும் நோக்குடன் 2 ஏக்கர் காணியைச் சுவீகரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

வலிகாமம் வடக்கு பகுதியில் அண்ணளவாக 300 ஏக்கர் நிலப்பரப்பு இன்னமும் கடற்படையின் கட்டுப்பாட்டின் கீழேயே உள்ளது.

இவ்வாறிருக்கையில், இந்தப் பகுதிகளுக் மேலதிகமாகவே தற்போதைய சுவீகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான பகிரங்க அறிவித்தல் தெல்லிப்பழை பிரதேச செயலரால் விடுக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கில், காணிகளை விடுவிப்பதாக அநுர அரசு மீண்டும் மீண்டும் கூறுகின்ற போதிலும், வாக்குறுதிக்கு அமைய எந்தவொரு விடுவிப்பு நடவடிக்கைகளும் இதுவரை இடம்பெறவில்லை. அத்துடன், விடுவிக்கப்பட்டாகக் கூறப்படும் காணிகள் பலவற்றில் இருந்து இன்னமும் கடற்படை வெளியேறாத நிலையும் காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில், தற்போது கடற்படைக்கு றேடர் அமைக்கும் நோக்குடன் மேலும் 2 ஏக்கர் காணியை சுவீகரிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளமை பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.



# சிறுநீரகம் மாற்றப்பட்ட பருத்தித்துறை இளைஞர் கிருமித் தொற்று ஏற்பட்டு கொழும்பில் மரணம்!

பருத்தித்துறையைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கு சிறுநீரகம் மாற்றப்பட்ட நிலையில், அவர் கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சந்தை மேற்கு ஒழுங்கை, பருத்தித்துறையைச் சேர்ந்த இராஜகுலேந்திரன் நிலோயன் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சிறுநீரக செயலிழப்பினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அண்மையில் அவருக்கு மாற்று சிறுநீரகம் பொருத்தப்பட்டது. இந்தநிலையில் கிருமித் தொற்று ஏற்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை இரவு அவர் உயிரிழந்தார்.

# சிரேஷ்ட தொழிற்சங்கத் தலைவர் வேலாயுதத்தின் நினைவு தினம்!

மலையகத்தில் மூத்த தொழிற்சங்கவாதிகளில் ஒருவரான அமரர் கருப்பையா வேலாயுதத்தின் 10 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று (13) திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்படுகின்றது.

இதனை முன்னிட்டு பதுளை மாவட்டத்தில் நினைவஞ்சலிக் கூட்டமும், பூஜையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், பொது இடங்களில் மரம் நடும் நிகழ்வும் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் 6 ஆம் திகதிக்குள் 23 ஆயிரத்து 932 மரங்களை நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.



சில பெருந்தோட்டப் பாடசாலைகளில் சதுரங்கப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் ஓவியப் போட்டி என்பனவும் இடம்பெறவுள்ளன. இந்தப் போட்டிகள் இந்த மாத இறுதியிலும், அடுத்த மாதம் ஆரம்பத்திலும் இடம்பெறவுள்ளன.

தொழிற்சங்கத் தலைவர், ஊவா மாகாண சபை உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் இராஜாங்க அமைச்சர் என முக்கிய பதவிகளை வகித்த கருப்பையா வேலாயுதம், அதன் மூலம் மலையக மக்களுக்குப் பல சேவைகளை வழங்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் இராஜாங்க அமைச்சராக இருந்த காலப் பகுதியிலேயே பசுமை பூமி காணி உரிமைத் திட்டமும் முன்னெடுக்கப்பட்டது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அந்தப் பட்டியலில் அநுரவும்!

முன்னைய எந்த அரசுகளுக்கும் கிடைக்காத வாய்ப்பாக நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுதியான பெரும்பான்மையோடு தேசிய மக்கள் சக்தியின் இந்த அரசு அதிகாரத்துக்கு வந்திருக்கின்றது.

தான் விரும்பிய அரசமைப்பு ஒன்றை தன் இஷ்டப்படி மக்களின் முன் வைத்து சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அங்கீகாரத்தை பெறுவதற்கான வாய்ப்பு இந்த அரசுக்குக் கிட்டியுள்ளது.

அதேசமயம் கடந்த நாடாளுமன்றத்தில் ஆக இரண்டே இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை மாத்திரம் வைத்திருந்த தேசிய மக்கள் சக்தி, நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவியை அகற்றி, புதிய அரசமைப்பைக் கொண்டு வருவோம் என்ற பிரதான வாக்குறுதியை வழங்கித்தான் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான மக்கள் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டது.

ஆனால் அரசமைப்பு உருவாக்கம் என்ற முக்கிய வாக்குறுதியை தன்னுடைய இந்த அரசாங்கத்தின் அந்திம காலத்துக்கு அது ஒத்திவைத்து விட்டது.

அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் - அந்தத்தில் - புதிய அரசமைப்பை நிறைவேற்றுவது என்பது சாத்தியப்படக்கூடியது அல்ல என்பது அரசியலைப் புரிந்தவர்களுக்கு நன்கு தெரியும்.

என்னதான் நாடாளுமன்றப் பெரும்பான்மையை இந்த அரசு வைத்திருந்தாலும் கூட, மிக விரைவில் பொதுத் தேர்தல் ஒன்றை முன்னால் எதிர்பார்க்கும் அந்தச் சமயத்தில், அரசமைப்புத் தொடர்பான அரசியல் துணிச்சல் மிக்க முடிவுகளை எடுப்பதோ, நாட்டுக்கு உகந்த - எல்லா இன மக்களையும் அரவணைக்கின்ற - நியாயமான அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதோ மிகக் கடினமான விடயம் என்பதை ஆட்சியாளர்களுக்கு வெளியில் இருந்து யாரும் புரிய வைக்கத் தேவையில்லை.

இந்த ஆட்சிப் பீடத்தின் ஓராண்டு நிறைவுறும் இச்சமயத்திலேயே இந்த ஆட்சியை வீழ்த்துவதற்காக எதிர்க் கட்சிகள் ஒன்றுபட்டு விட்டன. வரும் நவம்பர் 11ஆம் திகதி பிரதான எதிர்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து அரசுக்கு எதிராகத் தலைநகர் கொழும்பில் நடத்தவிருக்கும் பேரணி அதற்குக் கட்டியம் கூறுகின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியையும் வலிமையான நாடாளுமன்றத்தையும் நாட்டின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க கையில் வைத்திருந்தாலும் கூட, தமது ஆட்சியின் முதலாவது வருட நிறைவிலேயே தமது ஆளும் தரப்பிற்குள் முதல்கட்ட அதிருப்தியை அவர் சந்திக்க தொடங்கி இருக்கிறார். கட்சிக்குள்ளும் அரசுக்குள்ளும் மிக வலிமையானவர் என்று கருதப்படும் அமைச்சர் பிமல் ரத்நாயக்கா விடம் இருந்து முக்கிய இரு அமைச்சுகளை பிடுங்கி எடுப்பதில் - எடுத்ததில் - அவர் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், அடுத்து வரும் வருடங்களில் அவர் தமது ஆளும் தரப்புக்குள் எதிர்கொள்ளப் போகின்ற சிக்கல்களுக்கான ஆயத்த மணி என்பதை அவர் இப்போது உணர்ந்து கொண்டிருப்பார்.

இத்தகைய நெருக்கடிகள் எல்லாம் சூழ இருக்கையில், ஆட்சிக் காலத்தின் அந்தத்தில் புதிய அரசமைப்பை உருவாக்குவது என்பது சாத்தியப்படப் போவதில்லை.

நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவியை இல்லாமல் ஒழிப்போம் என்ற வாக்குறுதியை முற்கூட்டியே மக்களுக்கு வழங்கி, அதனடிப்படையில் அதிகாரத்துக்கு வந்த பின்னர், அதைச் செய்யாமல் பதவியில் இருந்து வெளியேறிய சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் பட்டியலில் அநுரகுமார திஸநாயக்கவும் சேர்ந்து கொள்வார் என்றே தோன்றுகின்றது.




# ஒன்லைன் வர்த்தகத்தால் ஒரு கோடி ரூபாவை இழந்த குடும்பஸ்தர் உயிர்மாய்ப்பு!

ஒன்லைன் வர்த்தகத்தில் ஒரு கோடி ரூபா பணத்தை இழந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார்.

யாழ்ப்பாணம் – கட்டுவன் பகுதியைச் சேர்ந்த தங்கராஜா ராஜ்குமார் (வயது 30) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் அமெரிக்கக் கம்பனி ஒன்றில் ஒன்லைன் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்துள்ளார். குறித்த வர்த்தகமானது சரிவடைந்ததால் அவருக்கு ஒரு கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

இதனால் அவர் மனவிரக்தியடைந்த நிலையில் நேற்றுமுன்தினம் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

இதற்கு முன்னரும் இவர் ஒரு தடவை பல இலட்சம் ரூபா நட்டத்தைச் சந்தித்த நிலையில் அவரது நண்பர்கள் மற்றும் உறவினர்கள் அந்த நட்டத்தில் இருந்து அவரை மீட்டமை குறிப்பிடத்தக்கது.





# மஹிந்த ஒரு கோழை!

## போட்டுத் தாக்குகின்றார் பொன்சேகா

"முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சிங்கம் என்று கூறினாலும் உண்மையில் அவர் ஒரு கோழை."

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"யுத்த காலத்தில் எங்களுக்குச் சீனாவிலிருந்து தோட்டாக்கள் வழங்குவது நிறுத்தப்பட்ட பிறகு, எங்களிடம் பீரங்கித் தோட்டாக்கள் தீர்ந்துவிட்டன. நிலைமை குறித்து அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோட்டபய ராஜபக்ஷவிடம் தெரிவித்தோம். அதற்கு அவர், "சீனாவிலிருந்து தோட்டாக்களைக் கடனாகவே இறக்குமதி செய்கின்றோம். எனவே, அவர்கள் அவற்றை அனுப்பவில்லை என்றால் எங்களுக்கு ஒன்றும் செய்ய முடியாது" என்றார்.

அதன் பிறகு, பஸில் ராஜபக்ஷவுடனான கலந்துரையாடல்களுக்குப் பிறகு, அவர் ஒரு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு பீ.பி.ஜயசுந்தரவுக்குச் சொன்னார், ஒரு தேவையொன்று உள்ளது, உடனடியாக இராணுவத் தளபதிக்கு 100 மில்லியன் டொலரை வழங்குமாறு கூறினார். 5 நிமிடத்தில் அவர் அதனைச் செய்தார். அதன் பிறகு, ஒரு மணி நேரம் வரையில் ஒரு நட்பு ரீதியான கலந்துரையாடல் பஸிலுடன் இடம்பெற்றது.

2005 ஆம் ஆண்டில், வடக்கு தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்காமல் இருப்பதற்காக விடுதலைப்புலிகள் அமைப்பு பயன்படுத்தப்பட்டதாகப் பஸில் ராஜபக்ஷ ஒப்புக்கொண்டார். ஜனாதிபதித் தேர்தலில் வழக்கு மக்கள் வாக்களிக்காமல் இருப்பதை அவர்கள் உறுதி செய்ததோடு, அதற்காக நாங்கள் என்ன செய்ய வேண்டும் எனக் கேட்க கடற்புலிகள் பயன்படுத்தும் டோரா வகை படகுகளுக்காக மலேசியாவுக்கு பணம் வழங்க வேண்டும் எனவும், அதற்காகப் பணம் வழங்குமாறும் கோரியுள்ளனர். அதற்கமைய, அந்த அமைப்புக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. அது வெளிநாடு ஒன்றில் வைத்து வழங்கப்பட்டது. அந்த நாடு எது என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்பவில்லை. அதிலிருந்து தாக்குதல் படகுகள் வந்து எங்களைத் தாக்கின. ஏராளமான அப்பாவி கடற்படையினர் இறந்தனர். இவர்கள் செய்தது தேசத் துரோக செயல் இல்லையா?

மஹிந்த ராஜபக்ஷவின் மகன் கடற்படையில் பணியாற்றிய போதிலும் அவர் கடலுக்குச் சென்று யுத்தம் புரியவில்லை. யுத்தம் செய்து நாங்கள் முல்லைத்தீவைக் கைப்பற்றிய பிறகு, கோட்டாபய ராஜபக்ஷ என்னிடம் அன்பாகப் பேசி, "சரத், நீங்கள் இப்போது சோர்வாக இருக்கிறீர்கள். இரண்டு வருடங்களாகப் போராடி வருகிறீர்கள். இப்போது அந்த வேலையை ஜகத் ஜயசூரியவிடம் ஒப்படைக்க வேண்டும்" என்றார். நான் மறுத்துவிட்டேன்.

பின்னர் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்னை அழைத்து, ஜனவரி 31 மற்றும் பெப்ரவரி முதலாம் திகதிகளில் போர் நிறுத்தத்துக்கு உத்தரவிட்டார். எங்கள் பாதுகாப்புப் படையினர் மீது நடந்த ஒரு பெரிய தாக்குதலில் எங்கள் வீரர்கள் பலர் கொல்லப்பட்டனர். மார்ச் மாத நடுப்பகுதியில் போரை நாங்கள் முடித்திருக்க வேண்டும். ஆனால், இந்த நடவடிக்கை மே மாத நடுப்பகுதி வரை இழுத்துச் செல்லப்பட்டது. மேலும் ஐநூறுக்கும் மேற்பட்ட வீரர்கள் இறந்தனர். இதற்கு மஹிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்க வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷவைச் சிங்கம் என்று கூறினாலும் உண்மையில் அவர் ஒரு கோழை. மஹிந்த ராஜபக்ஷ ஒரு துரோகி என்றும், பயங்கரவாதிகளுக்குப் பணம் வழங்கியதாலும், ஏராளமான வீரர்கள் இறந்ததாலும் அவர் ஒரு கோழை என்றும் நான் சொன்னேன். எனவே, அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினேன்.

இன்று, தான் போர் நிறுத்தம் கொடுக்கவில்லை என்று மஹிந்த பொய்யான அறிக்கைகளை வெளியிடுகின்றார். தற்போதைய அரசு சட்டத்தைச் செயற்படுத்த முயற்சிக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம். இப்படி நாட்டைக் காட்டிக் கொடுத்த மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகச் சட்டம் பிரயோகிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

விஜேராமவில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து கோட்டாபய ராஜபக்ஷவும் மஹிந்த ராஜபக்ஷவும் ஏராளமான மர தளபாடங்களைத் திருடியுள்ளனர்.

மே 17 அன்று காலையில் மஹிந்த, கோட்டாபய, பஸில் மற்றும் எரிக் சொல்ஹெய்ம் உள்ளிட்ட ஏனையவர்களுக்கு இடையே ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றதோடு, அதில் பயங்கரவாதிகளை அடிபணிய வைக்கும் நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. இதன் போது விடுதலைப்புலிகள் வெள்ளைக் கொடிகளைக் காட்டி சரணடைவார்கள் என்றெல்லாம் கலந்துரையாடப்பட்டது. எவ்வாறியினும், பயங்கரவாதிகளைக் கொன்று இந்தப் போரை நிறைவு செய்ய வேண்டும் என்று மட்டுமே நான் நின்றேன். அப்படி இல்லையெனில் பிரபாகரன் இன்று உயிருடன் இருந்திருந்தால், மஹிந்தவின் அரசில் அவருக்கும் அமைச்சர் பதவி வழங்கப்பட்டிருக்கும். கே.பி. மற்றும் பிள்ளையானை இன்னும் நடிக்க வைக்கின்றார்கள். கோட்டாபயவும் மற்றவர்களும் போரைத் தடம் புரள வைப்பதற்காகப் பல முறை முயற்சித்துள்ளனர்." – என்றார்.

# மூவின சமூகத்தினரதும் பங்கேற்புடன் இடம்பெற்ற மத நல்லிணக்க செயலமர்வு



(றிஸ்வான் சாலிஹு்)

“இனங்களுக்கிடையில் சகவாழ்வு மலர்தல், தாய்நாட்டில் அமைதியையும் சகவாழ்வையும் கட்டியெழுப்புவோம்” எனும் தொனிப்பொருளிலான செயலமர்வு நிதா பௌன்டேஷன் அனுசரனையில், ருஹு்னு லங்கா அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (12) அக்கரைப்பற்று ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் ருஹு்னு லங்கா அமைப்பின் தலைவரும் கலாச்சார உத்தியோகத்தருமான எம். எஸ். ஜஃபர் தலைமையில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த சுமார் நூற்றுக்கும் அதிகமான தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள சகோதர சகோதரிகள் கலந்து கொண்டு இந்தச் செயலமர்வின் இலக்கு மற்றும் நோக்கத்தையும் அடைந்து கொண்டார்கள்.

இந்தச் செயலமர்வின் போது இனங்களுக்கிடையில் ஏற்படும் பிரிவினைவாதங்களை எவ்வாறு தீர்ப்பது, இஸ்லாமிய மார்க்கம் பிரிவினைகளை ஏற்படுத்தவில்லை, மதத்தலைவர்கள் எவ்வாறு வழிகாட்ட வேண்டும், முஹம்மது நபி அவர்கள் பிற மதத்தினரோடு இஸ்லாமியர்கள் சகஜமாக வாழ வேண்டும் என்ற வழிகாட்டல்களை எவ்வாறு போதித்தார்கள், இஸ்லாமிய ஜனாஸாவை எவ்வாறு அதன் இறுதி கடமையை செய்வது போன்ற பல்வேறு விடயங்கள் இஸ்லாமிய மார்க்க அறிஞர் களால் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்ரமவும், விசேட அதிதிகளாக அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளர் றாசீத் யஹ்யா, இறக்காமம் உதவி பிரதேச செயலாளர் றொசீன் தாஜ், மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எச்.பீ. அனீஸ், கிழக்கு மாகாண பிரதான மகாநாயக்க தீகவாபி பரிவார பன்சல விகராதிபதி போதிவல சந்திரானந்த, மேஜர் திலிப திலகரத்ன, மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர், மும்மதங்களின் தலைவர்கள், நிதா பௌன்டேஷன், ருஹு்னு லங்கா அமைப்பின் பிரதிநிதிகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.





# சாய்ந்தமருது பகுதிக்கு விஜயம் செய்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்!



(பாறுக் ஷிஹான்)

சாய்ந்தமருது பகுதிக்கு விஜயம் செய்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பொலிஸாருடன் கலந்துரையாடல் ஒன்றில் பங்குபற்றினார்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியில் அமைந்துள்ள தனியார் மண்டபத்தில் குறித்த கலந்துரையாடல் நேற்று முன்தினம் சனிக்கிழமை (11) மாலை நடைபெற்றது.

இதன்போது பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனரத், கிழக்கு பிராந்தியத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜயசுந்தர, அம்பாறை பிரதி பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதுமுல்ல, அம்பாறை மாவட்டதில் பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் குமார ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடலில் கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட பொலிஸ் உயரதிகாரிகள் பொலிஸ் அத்தியட்சகர் இதர பொலிஸ் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் 'சரோஜா' என்ற தொனிப் பொருளில் பாதுகாப்பற்ற சிறுவர் சிறுமியர் தொடர்பில் ஸ்ரிக்கர் ஓட்டோவுக்கு ஒட்டும் நிகழ்வும் அங்கு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் மற்றுமொரு நிகழ்வு பொத்துவில் கோமாரி செல்வபுரம் கிராமத்தில் இடம்பெற்றது. மிக நீண்ட காலமாக நிலவிவரும் குடிநீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு பொலிஸ் திணைக்களத்தின் ஓய்வு பெற்ற ஊழியர்கள் உதவி செய்துள்ளனர்.

இதன் அங்குரார்ப்பணவிழாவில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால , நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.அப்துல் வாஸித், பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனரத் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.





# வீட்டில் கசிப்பு உற்பத்தி செய்த தந்தை, மகனுக்கு அபராதம்!

(கற்பிட்டி எம். எச். எம் சியாஜ்)

தங்கொட்டுவ, தாமரக்குலிய பகுதியில் வசிக்கும் தந்தை மற்றும் மகன் ஆகிய இருவரும் தமது வீட்டுக்குள் வைத்துக் கசிப்பு மதுபான ஆலை நடத்தி வந்தமைக்காக இருவருக்கும் மாரவில மேலதிக மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி தினிது சமரசிங்க நான்கு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

சந்தேகத்துக்கு உரிய தந்தை மற்றும் மகன் இருவரும் தங்கள் வீட்டில் கசிப்பு மதுபான ஆலை நடத்தி வருகின்றனர் என்று வென்னப்புவ உதவிப் பொலிஸ் கண்காணிப்பாளர் சண்திமல் விஜேசிங்கவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், தங்கொட்டுவ பொலிஸாரின் ஊழல் தடுப்புப் பிரிவின் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் குழு சோதனை நடத்தியது.

சோதனையின் போது, இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்த பொலிஸ் அதிகாரிகள் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட பல உபகரணங்களையும் பறிமுதல் செய்தனர்.

சந்தேக நபர்களைத் தங்கொட்டுவ பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

சந்தேகத்துக்கு உரிய தந்தைக்கு ஒரு லட்சத்து 66 ஆயிரம் ரூபாவும் மற்றும் மகனுக்கு 3 லட்சத்து 39 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.




# காங்கேசன்துறை துறைமுகமும் யாழ்ப்பாண விமானநிலையமும்!

## இலங்கையின் வடக்கு வணிக மற்றும் ஒத்துழைப்பின் நுழைவாயில்கள்


- ராஜ் சிவநாதன் -

இலங்கையின் அமைச்சரவை மாற்றம் குறித்த அண்மைய செய்திகள், நாட்டின் வளர்ச்சி திட்டப் பயணததில் மேலும் ஒரு முக்கிய திருப்பு முனையை குறிக்கின்றன. "ஹிரு நியூஸ்" (10 அக்டோபர் 2025) தெரிவிப்பதன்படி, பிமல் ரத்நாயக்கா போக்குவரத்து, நெடுஞ்சாலை மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். அதே சமயம், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து பொறுப்பு அநுரா கருணாதிலகாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றம் "அடுத்த தேசிய பட்ஜெட்டிற்கு முன் அரசு அபிவிருத்தி இலக்குகளை வேகப்படுத்தவும் ஒழுங்குபடுத்தவும்" நோக்கமுடையது என அறிக்கை குறிப்பிடுகிறது.

இந்த நிர்வாக மாற்றம், வடக்கு மாகாணத்தின் இரண்டு முக்கியமான கட்டமைப்பு திட்டங்களின் மீது புதிய கவனத்தை செலுத்துவதற்கான வாய்ப்பை உருவாக்குகிறது – காங்கேசன்துறை (KKS) துறைமுகம் மற்றும் யாழ்ப்பாண விமானநிலைய விரிவாக்கம். இவை இரண்டும் இலங்கையின் பொருளாதாரத்தையும் பிராந்திய இணைப்பையும் மாற்றும் திறன் உடையவை.

### வடக்கு நுழைவாயிலை திறந்திடல்

இலங்கையின் வடக்கு மாகாணம் – குறிப்பாக யாழ்ப்பாணம் – இன்னும் பொருளாதார ரீதியாக குறைவாக இணைக்கப்பட்ட பகுதியாகவே உள்ளது. முழுமையாக இயங்கும்

காங்கேசன்துறை துறைமுகம், மீன்பிடி, வேளாண்மை, பால்வள மற்றும் பனை சார்ந்த தொழில்களில் ஈடுபடும் வடக்கு உற்பத்தியாளர்களை பாக்கு நீரிணை வழியாக இந்தியா மற்றும் பிற நாடுகளின் சந்தைகளுடன் இணைக்க முடியும்.

இந்திய அரசின் 61 மில்லியன் அமெரிக்க டொலர் உதவித் தொகையுடன் நடத்தப்பட்ட சாத்தியக்கூறு ஆய்வுகள், வணிக ரீதியாக பெரிய வாய்ப்புகளை வெளிப்படுத்துகின்றன. பாதுகாப்பான மதிப்பீடுகளின் படி, மாதந்தோறும் 2,000 முதல் 5,000 தொன் வரை சரக்கு இயக்கம் நிகழலாம். நாகப்பட்டினம் – காங்கேசன்துறைஅதிவேக படகு சேவையின் பயணிகள் எண்ணிக்கை தற்போது மாதத்திற்கு 1,200 முதல் 2,000 வரை இருக்கிறது தினசரி சேவைகள் மீண்டும் தொடங்கினால் இது 5,000 ஐ மீறும் திறன் கொண்டது.

இவை ஊகங்களல்ல – இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் அதன் கூட்டாளிகள் தொகுத்துள்ள செயற்பாட்டுதரவுகளே இதற்குக் காரணம். அடித்தளம்அமைக்கப்பட்டுவிட்டதுஇப்போதுதேவைப்படுவது வேகமான அரசியல் மற்றும் நிர்வாக உறுதிப்பாடே.

### விமான இணைப்பு: வடக்கு பொருளாதார வேகமூட்டல்

துறைமுக மேம்பாட்டுடன் இணைந்து, யாழ்ப்பாண விமானநிலைய விரிவாக்கமும் முக்கியத்துவம் வாய்ந்தது. தற்போது கொழும்பு – யாழ்ப்பாணம் சாலைப் பயணம் போக்குவரத்து நெரிசல் மற்றும் குறைந்த அடிப்படை வசதிகள் காரணமாக சுமார் 10 மணி நேரம் ஆகிறது. மேம்பட்ட விமான இணைப்பு இந்த பயணத்தை வெறும் ஒரு மணி நேரத்திற்குள் குறைத்து, மக்கள் மற்றும் பொருள்களின் வேகமான நகர்வைச் சாத்தியமாக்கும். இதன் மூலம் உள்ளூர் மற்றும் பிராந்திய வர்த்தகம் வலுப்படும்.

மேம்படுத்தப்பட்ட விமான நிலையம் தெற்காசியா மற்றும் மத்திய கிழக்கு இடையிலான முக்கிய இடமாற்ற மையமாக மாறும். இதனால் சர்வதேச விமான சேவைகள் ஈர்க்கப்படுவதைத் தவிர, சுற்றுலா வளர்ச்சி மற்றும் விரைவில் கெட்டுப்போகும் பொருள்கள் – குறிப்பாக கடல் உணவு, பால்வளம், புது காய்கறி போன்றவை – இந்தியா மற்றும் வளைகுடா சந்தைகளுக்கு சில மணி நேரங்களிலேயே சென்றடைய உதவும்.

### அரசியல் மாறினாலும் தொடர்ச்சி அவசியம்

முந்தைய காலங்களில் பிமல் ரத்நாயக்கே காங்கேசன்துறை துறைமுக மேம்பாட்டில் எச்சரிக்கை மனப்பாங்கைக் காட்டியிருந்தாலும், எதிர்ப்புக் காட்டவில்லை. இப்போது அவர் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சராக இருப்பதால், கட்டமைப்பு இணைப்பை வலுப்படுத்தும் முக்கிய பொறுப்பை தொடர்ந்து வகிக்கிறார். துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து பொறுப்பு அநுரா கருணாதிலகாவுக்கு மாற்றப்படுவது பின்னடைவு அல்ல மாறாக, நீண்டகாலமாக நிறுத்தப்பட்டுள்ள திட்டங்களை வேகப்படுத்தும் நிர்வாக மறுசீரமைப்பாகக் காணப்பட வேண்டும்.

### இப்போது மிக முக்கியமானது – கொள்கை தொடர்ச்சிதான்.காங்கேசன்துறை

துறைமுகம் மற்றும் யாழ்ப்பாண விமானநிலையம் போன்ற திட்டங்கள் அரசியல் மாற்றங்களில் சிக்கிக்கொள்ளக்கூடாது. இவற்றின் வெற்றிகரமான நிறைவேற்றம், இலங்கையின் நெருக்கடியுக்குப் பிந்தைய மீட்சியின் சமவிகிதப் பகிர்வை தீர்மானிக்கும்.

### விரிவான பொருளாதார பலன்கள்

இந்த இரண்டு திட்டங்களின் வேகமான நிறைவேற்றம் பின்வரும் தேசிய நன்மைகளை அளிக்கும்:

- கொழும்பு துறைமுக நெரிசல் குறைவதால், நாடு முழுவதும் லாஜிஸ்டிக்ஸ் திறன் மேம்படும்.
- வடக்கும் தெற்கும் இடையிலான போக்குவரத்து செலவும் நேரமும் குறைந்து, தொழிலாளர் நகர்வு மற்றும் வணிகம் வளர்ச்சி அடையும்.
- இந்தியா மற்றும் பிற நாடுகளுக்கான வடக்கு

தொடர்ச்சி▼




# காங்கேசன்துறை துறைமுகமும் யாழ்ப்பாண விமானநிலையமும்!

## இலங்கையின் வடக்கு வணிக மற்றும் ஒத்துழைப்பின் நுழைவாயில்கள்

தொடர்ச்சி▲

ஏற்றுமதிகள் அதிகரிக்கும் – குறிப்பாக விரைவில் கெட்டுப்போகும் பொருள்களில்.

- களஞ்சியம், மீன்பிடி மற்றும் வேளாண் மூலப் பொருள் செயலாக்கம் போன்ற துறைகளில் புதிய முதலீடுகள் உருவாகும்.
- கலாசார மற்றும் மக்கள் குழுமங்களுக்கு இடையிலான பரிமாற்றம் ஊக்குவிக்கப்பட்டு, தேசிய ஒற்றுமை வலுப்படும்.

**தூரநோக்கு உறுதியே தேவை**

இலங்கை தற்போது ஒரு முக்கியக் கட்டத்தில் உள்ளது - அடிப்படை கட்டமைப்புகள் அதன் பிராந்திய முக்கியத்துவத்தை தீர்மானிக்கக் கூடியவை. காங்கேசன்துறை

துறைமுகத்தையும் யாழ்ப்பாண விமானநிலையத்தையும் முழுமையாக நிறைவு செய்வதன் மூலம், அரசு கொழும்பு மையப்படுத்தப்பட்ட வளர்ச்சிக்குப் பக்கமாக, வடக்கு வழியாக ஒரு புதிய பொருளாதார வழித்தடத்தைத் திறக்க முடியும்.

அமைச்சரவை மாற்றம் வந்தாலும், பார்வை அதேதாகவே இருக்க வேண்டும் – வடக்கை ஒரு புறநிலைப் பிரதேசமாக அல்லாது, தெற்காசியாவையும் அதற்கு அப்பாற்பட்ட உலகத்தையும் இணைக்கும் மூல நுழைவாயிலாக மாற்ற வேண்டும்.

**முடிவு**

காங்கேசன்துறை துறைமுகமும் யாழ்ப்பாண விமானநிலையமும் வெறும் கட்டமைப்பு திட்டங்கள் அல்ல் அவை சேர்க்கை, வளர்ச்சி மற்றும் தேசிய மறுமலர்ச்சி எனும் இலக்குகளின் அடையாளங்களாகும். இவை நிறைவேறுவது இலங்கையின் வளர்ச்சி இனி கொழும்பு மையப்படுத்தப்பட்டதல்ல, உண்மையில் நாடு முழுவதும் பரவியதென நிரூபிக்கும்.

புதிய அமைச்சரவை மாற்றங்கள், நடைமுறைக்குப் பொருத்தமான மற்றும் முன்னோக்கிய கொள்கைகளுடன் இணைந்தால், நீண்டகாலமாக பேசப்பட்ட திட்டங்களை நனவாக்கும் உந்துவிசையாக அமையும். இந்த துறைமுகங்களின் விரைவான மீள்தொடக்கம், வடக்கு பொருளாதாரத்தை உயிர்ப்பிக்கும் வரை மட்டுமல்ல - இலங்கை ஒரு பிராந்திய வணிக, பயண மற்றும் ஒத்துழைப்பு மையமாக தன்னை நிறுவும் உறுதியையும் வெளிப்படுத்தும்.

# 11 இளைஞர்கள் கடத்திப் படுகொலை; கரன்னகொடவுக்குத் தண்டனை தேவை

## பொன்சேகா வலியுறுத்து



“மாணவர்கள் உள்ளிட்ட 11 இளைஞர்களைக் கடத்திக் கப்பம் கோரிப் படுகொலை செய்தமைக்காக முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட போன்றவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.”

– இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“வசந்த கரன்னகொட, சவேந்திர சில்வா போன்ற தளபதிகளுக்கு சர்வதேசத்தால் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. ஆனால், சரத் பொன்சேகாவுக்குத் தடைகள் விதிக்கப்படவில்லை என்று மஹிந்த ராஜபக்ஷவின் பேச்சாளர் கூறியதை அவதானித்தேன்.

அவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும், அமெரிக்காவால் முதன்முதலில் எனக்குத்தான் தடைகள் விதிக்கப்பட்டன. இந்தத் தடைகள் காரணமாக, நான் இன்றளவும் அமெரிக்காவுக்குச் செல்ல முடியாது. ஆனால், ராஜபக்ஷக்களுக்குதான் தடைகள் இல்லை. அவர்கள் சுதந்திரமாக அமெரிக்காவுக்குச் சென்று வருகின்றனர்.

அத்துடன், கரன்னகொட போன்று இழிவான செயல்களில் நான் ஈடுபட்டதில்லை. மாணவர்கள் உள்ளிட்ட 11 இளைஞர்களைக் கடத்திக் கப்பம் கோரிப் படுகொலை செய்தது கரன்னகொட என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். எனவே, அத்தகைய நபர்களுக்கு பொருளாதாரத் தடைகள், பயணத் தடைகள் மட்டும் போதாது. அவர்கள் சிறைகளில் இருக்க வேண்டியவர்கள்.” – என்றார்.



# முள்ளிப்பொத்தானை ஈச்சநகரில் காட்டு யானைகளின் தொல்லை!

(ஏ.எச்.ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள முள்ளிப்பொத்தானை ஈச்ச நகர்ஒ பகுதியில் தொடர்ந்தும் காட்டு யானைகளின் தொல்லையால் தாங்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று அதிகாலை 2.00 மணியளவில் ஈச்சநகர் குளத்தை அண்டிய பகுதியில் ஊருக்குள் புகுந்த காட்டு யானை பயிர்களையும் உடைமைகளையும் சேதத்துக்குள்ளாக்கி விட்டு சென்றுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் உள்ள ஈச்ச நகர் குளத்தின் வழியாக காட்டு யானைகள் அதிகம் ஊருக்குள் படையெடுக்கின்றன எனவும், பாதுகாப்பான யானை வேலி இன்மையால் இரவில் நிம்மதியாகக் கூட தங்கள் பிள்ளைகளுடன் தூங்க முடியாத நிலை காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று அதிகாலை தங்களின் காணிக்குள் உள்ள தென்னை,பலா,வாழை போன்ற சுமார் 15 க்கும் மேற்பட்ட பயிரினங்களை யானைகள் துவம்சம் செய்துள்ளன எனவும் அப் பகுதி மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

எனவே இக் காட்டு யானைகளின் தொல்லைகளில் இருந்து அச்சமின்றி வாழக் கூடிய சூழ் நிலைகளை ஏற்படுத்தி தருமாறு உரிய அதிகாரிடம் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.









# முத்து நகர் விவசாயிகள் நேற்று 26 ஆவது நாளாகப் போராட்டம்

(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை முத்து நகர் விவசாயிகள் தங்களின் அபகரிக்கப்பட்ட விவசாய நிலத்தை மீளப் பெற்றுத்தரக் கோரிய தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நேற்றுடன் 26ஆவது நாளாக திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக முன்னெடுத்தனர்.

அகில இலங்கை விவசாய சம்மேளனம், மக்கள் போராட்ட முண்ணனியின் செயற் குழு உறுப்பினர் வசந்த முதலிகே போன்ற தரப்பினரும் விசேடமாக இந்த விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்து வரும் நிலையில் நேற்றும் அவர்கள் இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இணைந்தனர்.

பிரதமரினால் வழங்கப்பட்ட இரண்டாம் கட்ட தீர்வுக்கான கால அவகாசம் இன்னும் 08 நாள்களே உள்ளன எனவும் இந்த விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அதே வேலை முத்து நகர் பகுதியில் சூரிய மின்சாரத்துக்கு அபகரிக்கப்பட்ட காணியை விடுத்து அண்மையில் உள்ள காணிக்குள் உழவு இயந்திரத்தை கொண்டு விவசாய நடவடிக்கையில் ஈடுபட்ட 09 விவசாயிகளை சீனக்குடா பொலிஸார் நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளனர்.

இம் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு, அவர்களின் நேரம் தொடர்ந்தும் போராட்டங்களுடனேயே செல்வதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதற்கு முன்னரும் தங்களது காணியை பெற்றுத்தரக் கோரிப் போராட்டங்களை நடத்திய போதிலும் எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை எனவும், பொலிஸாரினால் இதற்கு முன்னர் ஐந்து விவசாயிகள் கைது செய்யப்பட்டு சிறையில் சுமார் 14 நாள்கள் அடைக்கப்பட்டு, அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.








# ‘சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக குரல் கொடுங்கள்!’ விளம்பர ஒட்டிகள் திருகோணமலையில் ஓட்டோக்களில்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரே நேரில் ஒட்டினார்

(எஸ்.கீதபொன்கலன்)

“சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக குரல் கொடுங்கள்!” – என்ற சரோஜா சிறுவர் பாதுகாப்புத் திட்ட விளம்பர ஒட்டிகள் நேற்று திருகோணமலையில் போக்குவரத்தில் ஈடுபடும் ஓட்டோக்களுக்கு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் ஆனந்த விஜயபாலவினால் ஒட்டப்பட்டன.

அமைச்சருடன் இணைந்து பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான ஓய்வு நிலை சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன ஆகியோரும் விளம்பர ஓட்டோக்களில் ஒட்டினர்.

நேற்றுக் காலை திருகோணமலைக்கு வருகை தந்த அமைச்சர் ஆனந்த விஜயபால,மற்றும் பொலிஸ் மாஅதிபர் ஆகியோர் மாவட்டத்தின் 20 பொலிஸ் பிரிவுகளினதும்அனைத்துதரநிலைபொலிஸாருடனும், போதைப்பொருள் தொடர்பிலான விடயங்களை கையாளுவது மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக கலந்துரையாடினர். அத்துடன் பொலிஸாரின் கடமைகள் மற்றும் தேவைகள் குறித்தும் கலந்துரையாடினர்.

திருகோணமலை கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடல்களில் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா, நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.













# நோர்வூட்டில் ஓட்டோ வீதியை விட்டு விலகி 50 அடி பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்து!

(பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)

இரத்தினபுரி காவத்தை பகுதியில் இருந்து தலவாக்கலை பகுதிக்கு சென்ற ஓட்டோ ஒன்று ஹட்டன் பொகவந்தலாவ பிரதான வீதியின் நோர்வூட் பகுதியில் வீதியை விட்டு விலகி சுமார் 50அடி பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 04.30 மணியளவில் இடம் பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

ஹட்டன் பகுதியில் இருந்து வந்த பஸ்ஸுக்கு இடம் வழங்க முற்பட்ட போதே இந்த ஓட்டோ கவிழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரத்தினபுரி காவத்தை பகுதியில் இருந்து தலவாக்கலை பகுதியில் உள்ள மரண வீடு ஒன்றுக்கு சென்று கொண்டிருந்த ஓட்டோ ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானது. அதில் ஒருவர் காயங்களுக்கு உள்ளாகி டிக்கோயா கிழங்கன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.















# வவுனியாவில் 32 இளைஞர், யுவதிகளுக்கு உறுதிபூசுதல் அருட்சாதனம் வழங்கிவைப்பு

**(பா.சதீசன்)**

வவுனியா வேப்பங்குளம் தூய சூசையப்பர் ஆலயத்தில் நேற்றுக் காலை மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் 32 இளைஞர், யுவதிகளுக்கு உறுதிபூசுதல் எனும் அருட் சாதனம் வழங்கி வைக்கப்பட்டது.

கடந்த மூன்று மாதகாலமாக உறுதி பூசுதல் தயார் படுத்தல் வகுப்புக்கள், பயிற்சிப் பட்டறைகள் இடம்பெற்று வந்தன. இந் நிலையில் நேற்றையதினம் காலை வேப்பங்குளம் தூய சூசையப்பர் ஆலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் தெரிவு செய்யப்பட்ட 32 இளைஞர், யுவதிகளுக்கு உறுதிபூசுதல் அருட்சாதனம் வழங்கிவைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் வேப்பங்குளம் சூசையப்பர் ஆலயம் பங்குத்தந்தை, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர், ஆயரின் செயலாளர் மற்றும் அருட்பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.







# இந்திரா காந்தியின் 'புளூஸ்டார்' இராணுவ நடவடிக்கை தவறானது!

## முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவிப்பு





ஆபரேஷன் புளூ ஸ்டார் ராணுவ நடவடிக்கையை முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி மேற்கொண்டது தவறு என்று முன்னாள் மத்திய அமைச்சரும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

அவரது இந்த கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

"பொற்கோயிலில் ஆபரேஷன் புளூ ஸ்டார் இராணுவ நடவடிக்கை மேற்கொண்டது தவறானது. அதை நான் ஏற்கிறேன். அதற்காக தனது உயிரையே பறிகொடுத்தார் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி. அந்த தவறில் இராணுவம், பொலிஸ், புலனாய்வுப் பிரிவு மற்றும் குடிமைப் பணியாளர்களின் பங்கும் உள்ளது.

என்னுடைய பஞ்சாப் மாநில பயணங்களில் நான் கண்டது என்னவென்றால் அங்கு காலிஸ்தான் கோரிக்கை அல்லது பிரிவினைவாதம் ஒழிந்துவிட்டது. அங்கு இப்போது நிலவும் அசல் பிரச்சினை என்னவென்றால் அது பொருளாதார சூழல்தான்" என இமாச்சலில் நடைபெற்ற இலக்கிய நிகழ்வில் ப.சிதம்பரம் தெரிவித்தார்.

1984 இல் பஞ்சாபில் பொற்கோயில் வளாகத்துக்குள் புகுந்திருந்த காலிஸ்தான் தீவிரவாதிகளை அடக்க ஆபரேஷன் புளூ ஸ்டார் இராணுவ நடவடிக்கை தொடர்பான உத்தரவில் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி கையெழுத்திட்டார். பொற்கோயிலுக்குள் இந்திய ராணுவம் நுழைந்தது, ஆபரேஷன் புளூ ஸ்டார் வெற்றியடைந்தது.

இதைத் தொடர்ந்து இந்திராவின் சீக்கியப் பாதுகாவலர்களால் அவரது உயிருக்கு ஆபத்து என்று உளவுத் துறை எச்சரித்தது. உயிரையே இழக்க நேர்ந்தாலும் மதத்தின் அடிப்படையில் தனது பாதுகாவலர்களை மாற்ற இந்திரா காந்தி மறுத்துவிட்டார்.

இந்திரா காந்தி மிகவும் நம்பிய பாதுகாவலர்கள் ப்யாந்த் சிங், சட்வந்த் சிங் இருவரின் துப்பாக்கிகளிலிருந்து 33 குண்டுகள் இந்திராகாந்தியின் உடலைத் துளைத்தன. இந்தியாவின் இரும்புப் பெண்மணி 66 வயதில் தனது உயிரை இழந்தார்.




# ஹமாஸ் தீவிரவாத படையினர் இன்று பிணைக் கைதிகளை விடுவிக்கத் திட்டம்

ஹமாஸ் தீவிரவாத படையினர் தங்கள் வசம் உள்ள பிணைக் கைதிகளை இன்று (13) திங்கட்கிழமை முதல் விடுவிக்க திட்டமிட்டுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. இதனை முன்னணி சர்வதேச செய்தி நிறுவனத்தின் வசம் ஹமாஸ் தரப்பு உறுதி செய்துள்ளது.

காசா பகுதியில் அமைதி நிலவ செய்வதற்கான ஆலோசனை கூட்டம் இன்று எகிப்து நாட்டில் நடைபெறவுள்ளது. இந்த நிலையில் சுமார் 20 உலக நாடுகள் இதில் பங்கேற்கின்றன. அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப்பும் இதில் பங்கேற்கிறார். இந்நிலையில், இந்த கூட்டம் தொடங்குவதற்கு முன்பாகவே பிணைக் கைதிகளை விடுவிக்க ஹமாஸ் தீவிரவாத படையினர் திட்டமிட்டுள்ளனர்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான உடன்படிக்கையின் படி முதல் கட்டமாக இஸ்ரேலை சேர்ந்த சுமார் 20 பிணைக் கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர். அதேநேரத்தில் சிறையில் உள்ள 2,000 பாலஸ்தீனர்களை இஸ்ரேல் விடுவிக்கவுள்ளது. இதை ஹமாஸ் தரப்பில் ஒசாமா ஹம்தன் உறுதி செய்துள்ளார்.

# ஆப்கன் தாக்குதலில் 58 பாக். வீரர்கள் பலி: பேச்சுவார்த்தைக்கு முட்டாகிக்கு அழைப்பு!



சனிக்கிழமை இரவு பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் இடையே நடந்த தாக்குதலில் பாகிஸ்தான் தரப்பில் சுமார் 58 இராணுவ வீரர்களும், 9 ஆப்கான் படையினரும் உயிரிழந்தனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. இது அண்மை காலத்தில் இரு தரப்புக்கும் இடையிலான மிக தீவிர மோதலாக அமைந்துள்ளது.

சமீப மாதங்களில், எல்லை தாண்டிய பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக ஆப்கானிஸ்தானுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே பதற்றமான சூழல் நிலவுகிறது.

இந்த நிலையில், அண்மையில் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் மீது பாகிஸ்தான் இராணுவம் வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதற்கு பதிலடி தரும் வகையில் தலிபான் படையினர் சனிக்கிழமை இரவு தாக்குதல் மேற்கொண்டதாக ஆப்கானிஸ்தான் ஆட்சியாளர்கள் தெரிவித்தனர்.

சவூதி அரேபியா மற்றும் கத்தார் தலையீடு காரணமாக சனிக்கிழமை இரவு ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் இடையிலான மோதல் முடிவுக்கு வந்தது என்று ஆப்கானிஸ்தான் அரசின் செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித் தெரிவித்துள்ளார்.

எல்லை பகுதி நமது முழு கட்டுப்பாட்டில் உள்ளது. இதனால் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுக்கப்பட்டுள்ளன, பாகிஸ்தானின் 25 ராணுவ நிலைகளை ஆப்கன் படையினர் கைப்பற்றி உள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார். அதே வேளையில் எல்லையில் உள்ள ஆப்கானிஸ்தானின் 19 பாதுகாப்பு படை நிலையைப் பாகிஸ்தான் கைப்பற்றி உள்ளது என்று அந்நாடு தெரிவித்துள்ளது.

பேச்சுவார்த்தைக்கு நாங்கள் தயார். நாங்கள் ஆப்கானிஸ்தானில் அமைதியை கொண்டு வந்தோம். அமைதிக் காகப் பாடுபடுகிறோம். முதலில் பாகிஸ்தான் தனது சொந்த நாட்டில் நிலவும் தீவிரவாத பிரச்சினையை கட்டுப்படுத்த வேண்டும். ஆப்கானிஸ்தானில் தெஹ்ரிக்-இ-தலிபான் பாகிஸ்தான் அல்லது டிடிபி உறுப்பினர்கள் யாரும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆப்கானிஸ்தானுக்கு எதிராக பாகிஸ்தான் ஏன் தாக்குதலை தொடங்கியது என்பதை கேட்க வேண்டும். அவர்கள் பேச்சுக்கு வரவில்லை என்றால் எங்களுக்கு வேறு வழி உள்ளது. எங்களுக்குள் உள்நாட்டு அளவில் வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், ஆப்கானிஸ்தானுக்கு பிரச்சினை என்றால் நாங்கள் ஒன்றுபடுவோம். எங்கள் எல்லையைப் பாதுகாப்போம் என ஆப்கானிஸ்தானின் வெளியுறவுத்துறை அமைச்சர் அமிர் கான் முட்டாகி தெரிவித்துள்ளார்.



# உக்ரைன் மற்றும் ரஷ்ய போரை உறுதியாகவே நிறுத்த முடியும்!

## உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவிப்பு

உக்ரைன மற்றும் ரஷ்யா போரை உறுதியாக நிறுத்த முடியும் என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையில், டொனால்ட் ட்ரம்ப் எடுத்த முயற்சியால் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இதனடிப்படையில், தற்போது காசாவில் போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்துள்ளது.

இது தொடர்பில் டொனால்ட் ட்ரம்புடன் ஜெலன்ஸ்கி தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

மேலும் தெரிவித்த ஜெலன்ஸ்கி,

ஒரு பிராந்தியத்தில் போரை நிறுத்த முடியும் என்றால் உக்ரைன் மற்றும் ரஷ்யா போர் உள்ளிட்ட மற்ற போர்களையும் உறுதியாக நிறுத்த முடியும்.

நமது எரிசக்தி அமைப்பின் மீதான ரஷ்யாவின் தாக்குதல்கள் குறித்து ட்ரம்பிடம் தெரிவித்தேன்.

எங்களுக்கு ஆதரவளிக்க அவர் தயாராக இருப்பதை நான் பாராட்டுகின்றேன். நமது வான் பாதுகாப்பை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இது தொடர்பாக ஒப்பந்தம் மேற்கொள்வது குறித்து நாங்கள் விவாதித்தோம்.

உண்மையான ராஜதந்திரத்தில் ஈடுபட ரஷ்ய தரப்பில் தயார்நிலை இருக்க வேண்டும், இதை வலிமை மூலம் அடைய முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.



# இன்றைய ராசி பலன்கள் - 13.10.2025

## மேஷம்

இன்றைய நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவீர்கள். உங்களிடம் வெற்றி பெறுவோம் என்ற உறுதி உள்ள காரணத்தால் நீங்கள் வெற்றியை எளிதில் அடைவீர்கள்.

உங்கள் பணிகளை நீங்கள் மகிழ்ச்சியாக செய்வீர்கள். பொதுவான விஷயங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் சக பணியாளர்களிடம் ஒத்த உணர்வுகளை அனுபவிக்க இயலும்.

நீங்களும் உங்கள் துணையும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள். ஆக்கப்பூர்வமான பேச்சு வார்த்தை காரணமாக உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் கையிலிருக்கும் பணம் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். பணத்தை நீங்கள் பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

## ரிஷபம்

உங்கள் திறமைகளை வெளிபடுத்த உகந்த நாள். முக்கிய முடிவுகள் எடுக்க சிறந்த நாள். இன்றைய நாளை சிறப்பாக பயன் படுத்திக்கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை திறமையாக கையாள்வீர்கள். புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. உங்கள் முயற்சிக்கு பலன் கிடைக்கும். நீங்கள் சிறப்புடன் பணியாற்றுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் அன்பாக இருப்பீர்கள். உறவில் காணப்படும் நல்ல புரிந்துணர்வே இதற்கு காரணம்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். இன்றைய நாளை சிறப்பாக திட்டமிட்டு முன்னேற வேண்டும்.

இன்று நீங்கள் உற்சாகமாகவும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.

## மிதுனம்

எதிர்மறை எண்ணங்களை விலக்கி நேர்மறை எண்ணங்களை மேற்கொள்ள வேண்டும். நம்பிக்கையுடன் செயல்பட்டால் உங்கள் இலக்குகளில் வெற்றி காணலாம்.

தவறான புரிந்துணர்வு காரணமாக சக பணியாளர்களுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். இது உங்கள் பனியின் வளர்ச்சியை பாதிக்கும்.

தவறான புரிந்துணர்வு மற்றும் அபிப்ராயம் காரணமாக உங்கள் துணையுடன் அமைதியின்மை காணப்படும்.

நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை குடுபத்திற்கு செலவு செய்வீர்கள். இன்று கணிசமனா தொகை இழப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

இன்று அஜீரணக் கோளாறு காணப்படும்.

## கடகம்

இன்று தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் புத்திசாலித்தனத்துடன் உங்கள் செயல்களை மேற்கொள்ளவேண்டும். பொறுமையும் உறுதியும் இன்று குறைந்து காணப்படும். இந்தப் பண்புகளை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.நீங்கள் பணியில் தவறுகள் செய்வீர்கள். இதனால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

இன்று நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். கடுமையான செயல்கள் மற்றும் உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவில் நல்லிணக்கம் பராமரிக்க இயலாது.

அதிகரிக்கும் செலவுகள் கவலை அளிக்கும். நீங்கள் பணத்தை சிறந்த முறையில் செலவிட வேண்டும். உங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்ய வேண்டும்.

## சிம்மம்

தொலை தூர நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். அதிக பயணங்கள் மேற்கொள்வீர்கள்.

சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பணியில் உங்கள் முயற்சிக்கு நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையின் அன்பைப் பெறுவீர்கள்.

இன்று அதிக பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும். நீங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியமாக இருப்பீர்கள். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. சில கடினமான சூழ்நிலைகள் காணப்பட்டாலும் நீங்கள் உற்சாகமான மன நிலையில் இருப்பீர்கள்.

## கன்னி

இன்று நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். இந்த வாய்ப்பை நன்கு பயன் படுத்தி நற்பலன் காணுங்கள்.

நீங்கள் பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றுவீர்கள். உங்கள் புரிந்துணர்வு சக்தி மூலம் நீங்கள் கடினமான பணிகளையும் எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருப்பீர்கள். உங்கள் சமயோஜித புத்தியும் நேர்மறை எண்ணங்களும் இந்தச் சூழ் நிலையை உருவாக்கித் தரும்.

நிதி வளர்ச்சி சீராக இருக்கும். நீங்கள் இன்று உங்கள் குடும்ப நலனுக்காக செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## துலாம்

உங்கள் தினசரி செயல்களை மேற்கொள்வதில் சற்று எச்சரிக்கை தேவை. உங்கள் வெற்றிப் பாதையின் குறுக்கே பதட்டமும் ஏமாற்றமும் காணப்படும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பது கடினமாக உணர்வீர்கள். உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும்.

குறைவான புரிந்துணர்வு காரணமாக இன்று உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு செலவு செய்வீர்கள். அது வீண் செலவாக இருக்கும். திட்டமிட்டு கட்டுப்பாட்டுடன் செலவு செய்வது உதவிகரமாக இருக்கும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

## விருச்சிகம்

இன்று அதிக கவலையுடன் காணப்படுவீர்கள். உற்சாகமாக இருக்க முயலுங்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிகளை முடிப்பதற்கு கூடுதல் கவனம் தேவை. அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

இன்று நீங்கள் சகஜமான உறுதியான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. இதனால் நல்லுறவை அனுபவிக்க இயலும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியமாக இருக்க யோகா அல்லது உடற்பயிற்சி மேற்கொள்ளுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 13.10.2025




சுய முயற்சி மூலம் நீங்கள் உங்கள் இலக்குகளை அடையலாம். எந்த செயலையும் நம்பிக்கையுடன் செய்யுங்கள்.

பணியிடத்தில் உங்கள் மேலதிகாரி களின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். கடின உழைப்பிற்கான பாராட்டு கிடைக்கும்.

உறவில் நல்லிணக்கம் காணப்படும். இது மேலும் வளரும். உங்கள் துணை சம்பந்தமான இன்றைய நிகழ்வுகள் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். சேமிப்ப தற்கான வாய்ப்பு அதிகம் காணப்படுகின்றது.

இன்று ஆரோக்கியத்தில் பெரிய பிரச்சினை ஏதும் இருக்காது. நீங்கள் துடிப்புடனும் உற்சாகமாகவும் இருப்பீர்கள்.




இன்றைய முக்கியமான விஷ யங்களை வேறு நாளைக்கு தள்ளிப் போடுங்கள். சுய முயற்சியில் நீங்கள் மனப் போராட்டங்களை சந்திப்பீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. எனவே உங்கள் மேலதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாக நேரலாம்.

உங்கள் துணையுடன் சுமூகமான உறவு காணப் படாது. குடும்பப் பிரச்சினை காரணமாக தேவையற்ற மோதல்கள் ஏற்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. இன்று ஏற்ற இறக்கங்கள் காணப்படும். இன்று நீங்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

நீங்கள் தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினையால் பாதிக் கப்படலாம். வறுத்த கார உணவு வகைகளை உட் கொள்வதை தவிர்க்கவும்.




இன்று கடினமான சவால்களை சந்திக்க நேரலாம். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை அளிக்கும்.

பணிகள் அதிகமாக காணப்படும். சில சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையுடன் அமைதியின்மையை உணர் வீர்கள். நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப் படையான அணுகுமுறை மேற்கொள்ள வேண் டும்.

உங்கள் கையில் அதிக பணம் காணப்படாது. மேலும் மருத்துவ செலவுகளை நீங்கள் மேற்கொள்ள நேரும்.

இன்று தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கார உணவுகளை தவிர்ப்பது நல்லது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். எனவே கவனமாக இருக்க வேண்டும். இந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்று பணிகளைக் கையாள்வது அவ்வளவு எளிதாக இருக்காது. இன்று சுமூகமான நாளாக இருக்க நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். உங்கள் பணிகளை கவனமுடனும் நம்பிக் கையுடனும் மேற்கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க இயலாது. இன்று உங்கள் நண்பர்களின் தவறான ஆலோசனை கேட்டு நடப்பீர்கள்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு. இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

# இலங்கை தேயிலைக்கு உலகளவில் தங்க விருது; உழைத்த தொழிலாளர்களுக்கு என்ன விருது?

## கொடுக்கப்போகின்றோம் எனக் கேட்கிறார் ஸ்ரீநேசன் எம்.பி.

(மட்டக்களப்பு)

உலகளவில் இலங்கையின் கறுப் புத் தேயிலைக்குத் தங்கவிருது கிடைத் துள்ளது. உலகளவில் கின்னஸ் புத்தகத் தில் அந்த சாதனை பதிவு செய்யப்பட் டுள்ளது.

இதனைப் பெருந்தோட்ட தொழில் துறை அமைச்சர் சமந்த வித்தியா ரத்ன பெருமையாகக் குறிப்பிட்டுள்ளார். இது பாராட்டத்தக்க விடயமாகும். ஏறத் தாழ ஒரு கிலோ தேயிலையின் விலை இரண்டு இலட்சத்து அறுபதாயிரம் வரை காணப்பட்டது என்று அறியப்படுகிறது.

இந்த வேளையில், அதற்காக உழைத்த மலையகத் தொழிலாளர்களின் நிலைமை பற்றி நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது. 200 ஆண்டுகளாக இந்த நாட்டின் பொருளாதாரத்துக்காக அர்ப்பணித்த மலையகத் தொழிலாளர் களின் வாழ்க்கைத் தரம் மோசமாகவே உள்ளது.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி யின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார். இவ்விடயம் குறித்து நேற்று ஞாயிற்றுக்கிழமை (12) அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள



அறிக்கையிலேயே இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது,

பிரித்தானியர் ஆட்சியில், அமைக்கப் பட்ட லயன் குடியிருப்புகளில், அடிப்படை வசதிகள் குறைந்த நிலையில், அவர்கள் அதிகளவாக வாழ்கின்றனர்.

முதல் பிரதமர், தேசபிதா டி.எஸ்.சேன நாயக்க 1948, 1949 களில் மலையக மக்களின் வாக்குரிமை, குடியுரிமை யைப் பறித்தார். பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ 1964 இல் சிறிமா – சாஸ் திரி ஒப்பந்தம் மூலமாக சுமார் 6 லட்சம் மலையக மக்களை இந்தியாவுக் குப் பலவந்தமாக அனுப்பினார். 1958, 1961, 1964, 1974, 1977, 1981, 1983 களில் இனவன்முறைகள் மூலமாக மலையகத் தமிழர்கள் பல நூற்றுக் கணக்கில் கொல்லப்பட்டனர்.

நாட்டுக்குப் பெருமை தேடிக்கொடுத்த மலையகத் தொழிலாளர்களின் வாழ் விடம், வாழ்க்கைத்தரம், சம்பளம், அவர் களுக்கான கணிப்பு, உரிமை என்பன இன்றும் குறைந்த மட்டத்திலே காணப் படுகின்றன.

அவர்களால் ஏற்படுத்தப்படும் பொருளாதார அனுகூலங்களை அனுப வித்கின்றோம், மதிக்கின்றோம். அதனை ஈட்டித் தந்த தொழிலாளர்களை அதி கார மையமும், அவர்களது பரிவாரங் களும் மிதிக்கின்றன. இப்படியான சாபக் கேட்டால் நாட்டின் பொருளாதாரம் 2023 இல் வங்குரோத்தானது. அதில் இருந்து இன்னும் நாடும், மக்களும் மீளவில்லை.

உழைப்பவனுக்கு கஞ்சி, உறிஞ்சு கின்றவனுக்கு கனதியான படையல் என்ற அநியாயம் உள்ளவரை இந்த நாட்டில் அபிவிருத்தியை எட்ட முடியாது. இதனைத் தற்போதுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாவது உணர்ந்து செயலாற்ற வேண்டும்.– என்று தெரிவித்துள்ளார்.